மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 55/2020 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மணிமேகலை | நாள் | 04.10.2023 |
| கணவர் பெயர் | பெருமாள் | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–**

1) நான் இவ்வழக்கில் 3ம் வாதி என்றால், சரிதான். 1, 2ம் வாதிகள் என் மகன்கள் என்றால், சரிதான். 1ம் பிரதிவாதி என் கணவரின் மூத்த சகோதரர் என்றால், சரிதான். இவ்வழக்கின் 2–வது பிரதிவாதி என் மாமனார் என்றால் அவர் தற்போது இறந்துவிட்டார் என்றாலும், சரிதான்.

2) என் கணவருடன் உடன் பிறந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர் என்றால், என் கணவருடன் சேர்த்து மொத்தம் 4 நபர்கள். அவர்கள் 1) லட்சுமணன், 2) பாண்டுரங்கன், 3) மூர்த்தி, 4) பெருமாள் ஆகியோர்கள் ஆவார்கள். தற்போது மேற்படி நபர்களில் பாண்டுரங்கனும், பெருமாளும் மட்டும் தான் உயிருடன் உள்ளனர் என்றால், சரிதான்.

3) மேற்படி என் கணவரின் மூத்த சகோதரர் லட்சுமணனுக்கு திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார் என்றால், சரிதான். மேற்படி லட்சுமணனின் இறுதி சடங்குகள் அனைத்தும் 1ம் பிரதிவாதி பாண்டுரங்கனின் வீட்டில் வைத்துதான் நடந்தது என்றால், சரிதான். ஆனால், அவர் இறக்கும் வரை என் மாமனார் சீரங்கனுடன் தான் வசித்து வந்தார். என் மாமனார் சீரங்கனுக்கும், அவர் இறப்பிற்கு பின் 1ம் பிரதிவாதி பாண்டுரங்கன் வீட்டில் வைத்து தான் இறுதி சடங்குகள் நடந்தது என்றால், சரிதான்.

4) என் கணவரின் 2–வது மூத்த சகோதரர் மூர்த்திக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால், இரண்டு ஆண் வாரிசுகள். நான் தற்போது வரை என் மாமனார் சீரங்கனுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தில் தான் வசித்து வருகிறேன் என்றால், சரிதான். ஆனால் மேற்படி சொத்தை பொறுத்து என் மாமனார் என் இரு மகன்களுக்கும் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துவிட்டார்.

5) மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள என் மாமனாரின் பூர்வீக சொத்து தான் தற்போது இவ்வழக்கின் வழக்குரை சொத்து விவரத்தில் "A" செட்யூலாக

நான் காண்பித்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி "A" செட்யூல் சொத்தானது என் மாமனாருக்கு அவரது முன்னோர்கள் வழியில் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றால், இல்லை. மேற்படி சொத்து என் மாமனாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அனுபவிக்கப்பட்டு வந்த சொத்து.

6) எத்தனை வருடங்களாக என் மாமனார் மேற்படி சொத்தை ஆக்கிரமித்து அனுபவித்து வந்தார் என்றால், சுமார் 50 வருடங்களுக்கும் மேலாக அவர் அவ்வாறு அனுபவித்து வந்தார். மேற்படி தாவா "A" செட்யூல் சொத்திற்கு மேற்குபுறத்தில் ஒட்டியவாறு எங்களுக்கு சொத்து உள்ளது என்றாலும், மேற்படி சொத்தை தான் நான் தாவா "B" அயிட்ட சொத்தாக வழக்குரையில் காண்பித்துள்ளேன் என்றாலும், சரிதான்.

7) மேற்படி தாவா "B" அயிட்ட சொத்து ஆரம்பத்தில் என் மாமனார் சீரங்கனின் அனுபவத்தில் இருந்து வந்தது என்றால், சரிதான். ஆனால், மேற்படி சொத்தை சுமார் 30 வருடங்களுக்கு முன்பே என் மாமனார் எங்கள் குடும்பத்திற்கு கொடுத்துவிட்டார். அன்றைய தேதி முதல் நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம்.

8) அவ்வாறு உள்ள நிலையில், என் வழக்குரையில் மேற்படி தாவா "B" அயிட்ட சொத்தை நானும், என் கணவரும் ஆக்கிரமித்து அனுபவித்து வந்ததன் அடிப்படையில் மேற்படி சொத்திற்கு பட்டா பெற்றுள்ளோம் என நான் சொல்லியுள்ளது தவறானது என்றால், சரிதான்.

9) தாவா "A" அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால், தற்போது எனக்கு சரியாக நினைவில்லை. மேற்படி தாவா "A" அயிட்ட சொத்திற்கு செக்குபந்தி விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியும். தாவா சொத்திற்கு கிழக்கே தங்கவேல் என்பவரது வீடும், மேற்கே எஸ்.பி.கோபாலகிருஷ்ணன் என்பவரது வீடும், வடக்கில் மெயின் ரோடும், தெற்கில் ரங்கநாதன் என்பவரது கடையும், வீடும் உள்ளது.

10) தாவா "A" அயிட்ட சொத்திற்கு நான் மேற்கண்டவாறு தான் என் வழக்குரையில் செக்குபந்தி விவரங்கள் காண்பித்துள்ளேனா என்றால், ஆமாம். என் வழக்குரை சொத்து விவரத்தில் கண்டுள்ள தாவா "A" அயிட்ட சொத்திற்கான செக்குபந்தி விவரத்திற்கும், தற்போது நான் குறுக்கு விசாரணையில் கூறியுள்ள செக்குபந்தி

விவரத்திற்கும் முரண்பாடுகள் உள்ளது என்றால், சரியல்ல. தற்போது அனுபவப்படி அவ்வாறு தான் உள்ளது.

11) தாவா "A" மற்றும் "B" அட்டவணை சொத்துக்களின் அளவு எனக்கு தெரியாது என்றால், சரியல்ல. மொத்தம் 9–1/2 சென்டு நிலங்களுக்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி தாவா "A" மற்றும் "B" அட்டவணை சொத்துக்கள் மொத்தம் சேர்த்து 4–1/2 சென்டுகள் தான் வருகிறது என்றாலும், நான் இவ்வழக்கிற்காக 9–1/2 சென்டுகள் வருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

12) தாவா "B" அட்டவணை சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால், எனக்கு சரியாக நினைவில்லை. மேற்படி சொத்துக்களுக்குரிய செக்குபந்தி விவரங்கள் என்னவென்றால், தாவா "A" அட்டவணை சொத்திற்குரிய அதே செக்குபந்தி விவரங்கள் தான் மேற்படி "B" அட்டவணை சொத்திற்கும் பொருந்தும். ஏனெனில் மேற்படி இரண்டு சொத்துக்களும் இணையாக உள்ளது. என் வழக்குரை சொத்து விவரத்திலும் மேற்படி இரண்டு அயிட்ட சொத்துக்களுக்கும் ஒரே செக்குபந்தி விவரத்தில் தான் காண்பித்துள்ளேன் என்றால், சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.